# தமிழகத் தேர்தல் களம் 2019

## நாடாளுமன்றத் தேர்தல் & சட்டமன்ற இடைத்தேர்தல்

### தொடக்கநிலைப் பிரச்சாரச் சூழல்

---

### கணிப்பு முடிவுகள்...

*தமிழகத்தின் அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும் 9360 (தொகுதிக்கு 240) பேரிடமும், இடைத்தேர்தலை முன்வைத்து சம்பந்தப்பட்ட 18 சட்டமன்றத் தொகுதிகளிலும் கூடுதலாக 1260 (தொகுதிக்கு 70) பேரிடமும் ஏப்ரல் 01 காலை முதல் 07 நண்பகல் வரை கருத்துக்கள் சேகரிக்கப்பட்டன. தமிழக அரசியல் களத்தில் "கருத்துக் கணிப்பியலின் தந்தை" எனக் கருதப்படும் பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் பெயரால் செயல்படும் "ரிப்ஸ்" (*Rajanayagam Institute of People Studies*) என்ற ஆய்வு நிறுவனத்தின் (காண்க:* www.peoplestudies.in*) ஆலோசனையுடன் "தொகுதி வலம்" நாளிதழின் சார்பில் இந்தக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.*

**01. நாடாளுமன்றத்துக்கு இன்று வாக்களிப்பதாக இருந்தால்...?**

***கட்சிகளின் பிரச்சாரம் தொடக்க நிலையில் இருந்து சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள இந்தக் காலகட்டத்தில் (01-07 ஏப்ரல்) நாடாளுமன்றத்துக்கு இன்று வாக்களிப்பதாக இருந்தால் திமுக, அதிமுக அணிகள் இரண்டும் சம பலத்தோடு களத்தில் நிற்கின்றன.***

**(குறிப்பு: கீழ்வரும் அட்டவணைகளில் உள்ள எண்கள் எல்லாம் சதவீதத்தைக் குறிக்கின்றன.)**

| | |
|---|---|
| திமுக அணி | 40.1 |
| அதிமுக அணி | 39.7 |
| அமமுக அணி | 9.2 |
| நாம் தமிழர் கட்சி | 1.2 |
| மக்கள் நீதி மய்யம் | 0.9 |
| பிறர் (சுயேட்சைகள் உள்பட) | 0.8 |
| நோட்டா | 2.9 |
| முடிவுசெய்யவில்லை | 5.2 |

*(அ) திமுக-அதிமுக அணிகளுக்கு இடையில் மிகக் கடுமையான போட்டி நிலவுவதால் யாருக்கு எத்தனை / எந்தெந்தத் தொகுதிகள் என்பதைத் தற்போது கணிக்க இயலாது. அது அடுத்துள்ள பத்து நாள்களில் கட்சிகள் முன்னெடுக்கும் களச் செயல்பாடுகள் வாக்காளர் மனநிலையில் ஏற்படுத்தப்போகும் தாக்கத்தைப் பொருத்து அமையும்.*

*(ஆ) அதிமுக அணியை விட திமுக அணிக்குத் தற்போது வெளிப்படும் "அதிக" ஆதரவு (0.4) புள்ளியியல்ரீதியாக முக்கியத்துவம் அற்றது (*statistically not significant*). அதாவது, இந்த "நிலையற்ற" வேறுபாடு கூடுவதும் குறைவதும் கட்சிகளின் "கவனிப்பு" உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் கூட்டுச்செயல்பாட்டைப் பொருத்து அமையும்.*

*(இ) தமிழக முழுமைக்குமான சராசரி ஆதரவு அமமுக-வுக்கு குறைவாக (9.2) இருந்தாலும், மூன்று முதல் அய்ந்து தொகுதிகளில் திமுக, அதிமுக அணிகளோடு மிக வலுவோடு அமமுக மோதும் மும்முனைப் போட்டிச் சூழல் தற்போது நிலவுகிறது.*

*(ஈ) "நோட்டா" மற்றும் "முடிவுசெய்யாதவர்கள்" எண்ணிக்கை கணிசமாக (8.1) இருப்பது கவனிக்கத்தக்கது. கட்சிகளின் "கவனிப்பை"ப் பொருத்து இவர்களின் முடிவு மாறக்கூடும் என்பதால், தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் இடத்தில் இவர்கள் உள்ளார்கள்.*

## 02.சட்டமன்றத்துக்கு இன்று வாக்களிப்பதாக இருந்தால்...?

*இடைத்தேர்தல் காணும் தொகுதி மக்களின் மத்தியில் திமுக அணியை விடச் சிறிதளவு அதிக ஆதரவுடன் அதிமுக அணி முன்னிலை வகிக்கிறது.*

| | |
|---|---|
| அதிமுக அணி | 36.5 |
| திமுக அணி | 35.7 |
| அமமுக அணி | 14.4 |
| நாம் தமிழர் கட்சி | 1.6 |
| மக்கள் நீதி மய்யம் | 1.1 |
| பிறர் (சுயேட்சைகள் உள்பட) | 1.3 |
| நோட்டா | 1.5 |
| முடிவுசெய்யவில்லை | 8.4 |

*(அ) நாடாளுமன்றத் தேர்தலில் திமுக அணிக்கு உள்ள "அதிக" ஆதரவு எப்படி புள்ளியியல்ரீதியாக முக்கியத்துவம் அற்றதோ, அதைப் போலவே இடைத்தேர்தல் களத்தில் அதிமுக அணிக்கு வெளிப்படும் "அதிக" ஆதரவும் (0.8) புள்ளியியல்ரீதியாக முக்கியத்துவம் அற்றது.*

*(ஆ) நாடாளுமன்றத் தேர்தலோடு ஒப்பிடுகையில், அமமுக-வுக்கு இடைத்தேர்தலில் வெளிப்படும் ஆதரவு "உயர்வு" (5.2) கவனிக்கத்தக்கது. அமமுக-வுக்கான ஆதரவு, 18 தொகுதிகளின் சராசரியாக 14.4 மட்டும் இருந்தாலும், ஏறத்தாழ ஆறு தொகுதிகளில் திமுக-அதிமுக-அமமுக அணிகளுக்கு இடையில் மும்முனைப் போட்டி நிலவுகிறது.*

*(இ) இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதிகளில், "நோட்டா" மற்றும் "முடிவு செய்யாதவர்கள்" எண்ணிக்கை ஏறத்தாழ 10 விழுக்காடாக உயர்ந்துள்ளது. கலந்துரையாடலின் போது பலரும் பகிர்ந்துகொண்டபடி, கட்சிகளிடமிருந்து இவர்களின் "எதிர்பார்ப்பும்" மிக அதிகமாக உள்ளது.*

## 03.எந்த அடிப்படையில் வாக்கு?

*தமிழக வாக்காளர்கள் எந்த அடிப்படையில் வாக்களிக்க முடிவெடுக்கிறார்கள் என்று (படர்க்கையில்) கேட்டபோது, முதலிடத்தில் சாதியும், ஏறத்தாழ அதற்கு இணையான வலுவுடன் வாக்குக்குப் பணமும் அடையாளம் காட்டப்படுகின்றன. பத்து விழுக்காடுக்கு மேல் பெற்று, முதல் நான்கு இடங்களில் வருபவை:*

| | |
|---|---|
| சாதி | 25.6 |
| "கவனிப்பு" (பணம் / பொருள்) | 24.5 |
| கட்சி (சின்னம் / தலைமை / கொள்கை) | 13.2 |
| கூட்டணி | 10.5 |

*ஊடகங்களுக்கு - குறிப்பாக சமூக வலைத்தள ஊடகங்களுக்கு - கட்சிகள் தரும் முக்கியத்துவத்துக்கு நேர் மாறாக, ஊடகங்களின் அடிப்படையில் வாக்களிக்கும் போக்கு இருப்பதாக மிகமிகக் குறைவான நபர்களே குறிப்பிடுகிறார்கள். ஒரு விழுக்காடுக்கு மேல் பெற்று, அடுத்த ஐந்து இடங்களில் வருபவை:*

| | |
|---|---|
| வேட்பாளர் (தகுதி / திறமை) | 6.7 |
| மதம் | 6.5 |
| தேசிய நலன் / தொகுதியின் தேவைகள் | 5.1 |
| ஊடகம் (செய்தி / விவாதம் / சமூக ஊடகங்கள்) | 3.2 |
| பிரச்சார உத்தி / தேர்தல் அறிக்கை / வாக்குறுதிகள் | 2.8 |

## 04.வாக்குக்குப் பணம்?

*வாக்களிக்கப் பணம் தருவது / பெறுவது குறித்து எந்தவிதமான குற்ற உணர்வையும் பெரும்பாலான தமிழக வாக்காளரிடம் காணமுடியவில்லை.*

*(அ) வேட்பாளர்கள் வலிய வந்து பணம் தந்தால் வாங்கிக்கொள்ள மறுக்கப்போவதில்லை என்ற எண்ணமே தமிழகத்தில் மேலோங்கி உள்ளது.*

| | |
|---|---|
| மறுக்கப் போவதில்லை | 83.3 |
| மறுத்து விடுவேன் | 4.8 |
| தேர்தல் ஆணையத்திடம் புகார் தெரிவிப்பேன் | 3.5 |
| பதில்சொல்ல முடியாது | 8.4 |

*(ஆ) பணம் தருகின்ற எல்லா வேட்பாளரிடமிருந்தும், கட்சி பேதமெல்லாம் பார்க்காமல் வாங்கிக்கொள்ளத் தயார் என்பதே பெரும்பான்மை வாக்காளரின் மனப்போக்கு.*

| | |
|---|---|
| எல்லாக் கட்சியிடமிருந்தும் வாங்கத் தயார் | 80.1 |
| நான் சார்ந்துள்ள கட்சியிடமிருந்து மட்டும் | 3.2 |
| ஒருவரிடமும் வாங்க மாட்டேன் | 7.9 |
| பதில்சொல்ல முடியாது | 8.8 |

*(இ) பணம் வாங்கிக் கொண்டாலும், தான் விரும்புகிற வேட்பாளருக்கே வாக்களிக்கும் போக்கும் அழுத்தமாக வெளிப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளரிடம் பணம் பெறும்போது, குடும்பத்திலுள்ள வாக்குகளை அவர்கள் தரும் பணத்திற்கேற்ப நிரந்து அளிக்கும் "நியாய" உணர்வையும் காணமுடிகிறது.*

| | |
|---|---|
| பணம் வாங்கினாலும் சுய விருப்பப்படியே வாக்கு | 65.0 |
| பணம் தரும் கட்சிகளுக்கு நிரந்து வாக்கு | 15.1 |
| ஒரு கட்சியிடம் மட்டும் பணம் - அதற்கு வாக்கு | 3.2 |
| பணம் வாங்கப்போவதில்லை | 8.3 |
| பதில்சொல்ல முடியாது | 8.4 |

**05.தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு?**

*(அ) தேர்தல் ஆணையம் சிறப்பாக, நடுநிலையாகச் செயல்படுவதாக ஏறத்தாழ அய்ந்தில் ஒருவர் (19.8) தெரிவிக்கின்றனர். தேவைக்கு அதிகமான கெடுபிடி காட்டுவது (29.7), அரசியல்வாதிகளை விட்டுவிட்டு, சாதாரண மக்களைத் தொல்லை செய்வது (27.2) மத்திய-மாநில ஆளும் கட்சிகளுக்கு அனுசரணையாகச் செயல்படுவது (21.4) ஆகியவை ஆணையம் குறித்த முக்கியப் பதில்கள்.*

*(ஆ) "வாக்குப்பதிவு நாளன்று சம்பளத்தோடு விடுமுறை வழங்குமாறு நிறுவனங்களுக்குக் கட்டளையிடும் தேர்தல் ஆணையம், கூலிவேலை செய்யும் ஏழை எளிய மக்களுக்கு வாக்குப்பதிவு நாளன்று ஒரு நாள் கூலி தருவது குறித்து ஏன் யோசிக்கவில்லை?" என்ற கேள்வியைத் தமிழகத்தின் பல இடங்களில் சாதாரண வாக்காளர்கள் எழுப்பியுள்ளனர்.*

*(இ) "எளிதில் பணத்திற்கு விலைபோகிறவர்கள் என வாக்காளர்களை இழிவு படுத்துவதையும், பணப் பட்டுவாடாவைத் தடுப்பதுதான் தலையாய தேர்தல் பணி என்பது போல நடந்துகொள்வதையும் விட்டுவிட்டு, தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டுவருவது குறித்து இந்த ஆணையமும் அறிவுஜீவிகளும் யோசித்தால் நல்லது" என்ற கருத்தையும் கலந்துரையாடலின் போது ஆங்காங்கே முன்வைத்துள்ளனர்.*

**06.தமிழக அரசின்மீது தாக்கம்?**

*இடைத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து தமிழக அரசியலில் எத்தகைய மாற்றங்கள் நிகழும் என்ற எதிர்பார்ப்பு குறித்து மக்கள் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமானவை:*

| | |
|---|---|
| அதிமுக ஆட்சி மாறி திமுக தலைமையிலான ஆட்சி வரும் | 34.7 |
| பழனிச்சாமி தலைமையிலான தற்போதைய அதிமுக ஆட்சியே தொடரும் | 33.1 |
| அதிமுக ஆட்சி தொடரும், ஆனால் தலைமையில் மாற்றமிருக்கும் | 19.3 |
| அதிமுக ஆட்சி கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி அமுலுக்கு வரும் | 12.5 |

07.களத்தில் கண்டதும் கேட்டதும்...

*(அ) பிரச்சார உத்திகளில் வித்தியாசமான, ரசிக்கத்தக்க அணுகுமுறையாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மன்சூர் அலிகானின் பிரச்சாரத்தை அவர் போட்டியிடும் தொகுதிக்குள்ளும் வெளியிலுமுள்ள பலர் குறிப்பிடுகிறார்கள்.*

*(ஆ) ஜனரஞ்சகமாகவும் எதார்த்தமாகவும் டிடிவி தினகரனின் பேச்சும் ஊடகச் சந்திப்பும் இருக்கிறது என்ற கருத்து எல்லாத் தொகுதிகளிலும் பரவலாக நிலவுகிறது.*

*(இ) ஒரு முன்னணி நடிகரைக் காண ஆர்வத்தோடு வரக்கூடிய கூட்டம், கட்சித் தலைவரான கமல்ஹாஸன் பிரச்சாரத்துக்குச் சேரவில்லை என்பதைப் பல இடங்களில் பார்க்க முடிகிறது.*

*(ஈ) பிரச்சாரத்திற்குக் கூட்டம் சேர்ப்பதற்கு ஆட்களை "சப்ளை" செய்வது ஒரு கட்டமைக்கப்பட்ட தொழிலாக உருவாகி வருகிறது. பல இடங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இத்தகைய "ஏஜன்ஸி"யாக செயல்படுவதைக் காண முடிகிறது.*

முடிவுகளின் சாராம்சம்:

**(அ) நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்துக்கான தேர்தல்களில் பெரும்பாலான இடங்களில் திமுக-அதிமுக அணிகளுக்கிடையேயும், ஓரிரு இடங்களில் திமுக-அதிமுக-அமமுக அணிகளுக்கிடையேயும் கடும் போட்டி நிலவுகிறது. அடுத்த பத்து நாள்களில் கட்சிகளின் பிரச்சார உத்திகள், குறிப்பாக, வாக்குப்பதிவுக்கு முந்திய கடைசி இரு நாள்களில் வேட்பாளர்-வாக்காளருக்கு இடையிலான "பரிமாற்றம்," இவற்றைப் பொருத்து யாருக்கு எத்தனை இடங்கள் என்பது அமையும்.**

**(ஆ) தற்போது "நோட்டா" மற்றும் "முடிவுசெய்யவில்லை" எனத் தெரிவிப்போரே தேர்தலின் இறுதி முடிவுகளை நிர்ணயிக்கும் இடத்தில் உள்ளார்கள்.**

**(இ) கட்சிகளிடமிருந்து பெரிய அளவிலான கடைசிநேரக் "கவனிப்பை" (பணம்/பொருள்) வாக்காளர்கள் எதிர்பார்க்கிறார்கள். தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இது திகழும். குறிப்பாக, இன்னும் முடிவுசெய்யாமல் மதில்மேல் பூனைகளாக இருப்போர் மீது அதிகமான தாக்கத்தை இது ஏற்படுத்தும்.**

**(ஈ) தேசிய / மாநில அளவில் யாருக்கும் ஆதரவாகவோ எதிராகவோ "அலை" உருவாகாத பட்சத்தில், தற்போதைய போக்கின்படி பார்த்தால், பெரும்பாலான தொகுதிகளில் வாக்கு வித்தியாசம் மிகக் குறுகலாகவே இருக்கும்.**

## 18 ஏப்ரல் 2019...

*ஏப்ரல் 07 நண்பகல் வரையிலான வாக்காளர் மனநிலை வெளிப்படுத்தும்* **கடும் போட்டி**, *அடுத்த பத்து நாட்களில் கட்சிகளின்* **பிரச்சாரம்**, *வாக்காளரின் கடைசி நேர பெரும் பண வரவுக்கான* **எதிர்பார்ப்பு**, *இரு உச்ச நாட்களில் நடைபெறும் வேட்பாளர்-வாக்காளருக்கு இடையிலான "பரிமாற்றம்" வாக்காளருக்குத் தரக்கூடிய "****திருப்தி****" ஆகிய காரணிகளின் கூட்டுச் செயல்பாட்டைப் பொருத்து ஏப்ரல் 18-ல் வாக்களிக்கப்படும். அதன் முடிவு, நாடாளுமன்றத்தைப் பொருத்த வரை, திமுக அணிக்கு 4 முதல் அதிகபட்சம் 37 வரை இடைப்பட்ட எந்த எண்ணிக்கையாகவும் இருக்கலாம். அதிமுக அணிக்கு 2 முதல் அதிகபட்சம் 35 வரை இடைப்பட்ட எந்த எண்ணிக்கையாகவும் இருக்கலாம். அமமுக அணிக்கு பூஜ்யத்துக்கும் அய்ந்துக்கும் இடைப்பட்ட எந்த எண்ணிக்கையாகவும் இருக்கலாம்.*


**AAA ராஜா *(9003111790)***
தேர்தல் களஆய்வு ஒருங்கிணைப்பாளர்
**தொகுதி வலம்** நாளேடு
**(122 வன்னியர் தெரு, சென்னை 94)**


***08 ஏப்ரல் 2019***